**ஏப்ரல் – 23**

# TNPSC துளிகள்

- இந்தியக் கடற்படையானது 'ஓஜாஸ்' எனப்படுகின்ற சுமார் 25 டன் இழுவைத் திறன் கொண்ட (பொல்லார்ட் புல்-BP) ஐந்தாவது இழுவைப் படகினைக் கொல்கத்தாவில் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியுள்ளது.
- மெட்டா நிறுவனமானது, வாட்ஸ்அப், இன்ஸ்டாகிராம் மற்றும் மெசஞ்சர் போன்ற சில சேவைகளில் மெட்டா AI திறன்களை மேம்படுத்துவதற்காக லாமா 4 எனும் அதன் புதிய தொடரினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- Next '25 எனும் மாநாட்டில், கூகுள் நிறுவனம் இதுவரையில் உருவாக்கிய மிகவும் திறன் வாய்ந்த, மிகைப்படுத்தப்பட்ட மற்றும் பெரும் மிகை ஆற்றல் பயன்திறன் கொண்ட அயர்ன்வுட் எனப்படும் இயந்திரக் கற்றலின் பல்வேறு செயல்பாடுகளை மிகவும் நன்கு வேகப்படுத்துவதற்கான ஒரு அலகினை (Tensor Processing Unit - TPU) அறிமுகப்படுத்தி உள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து அரிய கல்வெட்டுகள் கண்டுபிடிப்பு




- இந்தியத் தொல்பொருள் ஆய்வு மையத்தின் (ASI) கல்வெட்டியல் பிரிவானது, சமீபத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மலையடிப்பட்டி மற்றும் பொன்னமராவதி ஆகிய பகுதிகளில் ஒரு சில கல்வெட்டுகளைக் கண்டறிந்து ஆவணப்படுத்தியுள்ளது.
- இந்தக் கல்வெட்டுகளானது கல்வெட்டு நகலெடுப்பு என்ற முறையைப் பயன்படுத்தி, அதன் பாதுகாப்பு மற்றும் தொடர்ந்து மேற்கொண்டு அதன் மீது ஆய்வு மேற்கொள்ளச் செய்வதற்காக மப்லித்தோ காகிதத்தில் நகலெடுக்கப்பட்டன.
- குடம்பீஸ்வரர் கோயிலுக்கு அருகில் ஒரு பாறைக் கல்வெட்டைக் கண்டறிந்தனர்.
- ஆரம்பக் கட்ட ஆய்வுகள் ஆனது, இந்தக் கல்வெட்டு 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பதைக் குறிக்கிறது.
- சுந்தர சோழபுரம் மற்றும் செவ்வலூர் கிராமங்களுக்கு இடையே ஓர் ஊரணி (நீர்

சேமிப்புக் குளம்) தோண்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நிலப் பிரிவினை ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்ட கல்வெட்டு ஆகும்.

- ஒரு சுனை (நீரூற்று) அருகே கண்டறியப்பட்ட மற்றொருக் கல்வெட்டு ஆனது, மன்னர் இராஜராஜன் சுந்தரபாண்டியன் பெயரைக் குறிப்பிட்டுள்ளது.
- செவ்வலூரைச் சேர்ந்த உடையான் பெருமாள் என்ற ஒருவர் இந்த ஒரு நீர்நிலையை உருவாக்கப் பங்களித்ததாக இதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- பொன்னமராவதியில் உள்ள சோழீஸ்வரர் கோயிலில், கருவறையின் மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ள கல்வெட்டுகளில் ஒன்று, மாறவர்மன் குலசேகர பாண்டியன் என்ற மன்னனின் 8 ஆம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்தது.
- இந்தக் கோயில் உழவளை நாடு பிரிவின் கீழ் வரும் சோழீஸ்வரர் உடைய நாயனார் கோயில் என்று அழைக்கப்படுகிறது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தக் கோயிலுக்குள் குறிப்பிட்ட இடங்களில் ஐந்து விளக்குகளை நிறுவுவதற்காக 40 பணம் நன்கொடையாக வழங்கப்பட்டதையும் இந்தக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.
- கிழக்கு சுவரில் காணப்படும் மற்றொரு கல்வெட்டு ஆனது, மூன்றாம் இராஜராஜனின் ஆறாவது ஆட்சியாண்டினைச் சேர்ந்தது என்றும், இராஜேந்திர சோழ வள நாட்டின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட ஒரு இடமாக இந்தக் கோயில் இருந்த இடத்தைப் பற்றி குறிப்பிடுகிறது.
- மேலும் இந்தக் கல்வெட்டு ஆனது அரிசி, நெய் மற்றும் பால் உள்ளிட்ட சடங்கு படையல் பிரசாதங்களைப் பற்றி விரிவாகக் குறிப்பிடுகிறது.

# தேசியச் செய்திகள்

## புதிய கடலடி உணவு வழங்கீட்டு அமைப்பு



- சென்னையின் தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (NIOT) அடல் பெருங் கடல் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் (ACOSTI) ஆனது, திறந்தநிலை கடல் கூண்டு மீன் வளர்ப்புக் கட்டமைப்பில் உள்ள மீன்களுக்குத் தீவனம் வழங்குவதற்காக ஒரு புதிய கடலடி உணவு வழங்கீட்டு அமைப்பை நிறுவியுள்ளது.
- இது மீன்களின் ஆரோக்கியத்தைக் கண்காணிப்பதற்காக என் ஓர் கட்டமைப்பையும் தொடங்கியுள்ளது.
- இந்தக் கட்டமைப்புகள் ஆனது, சமீபத்தில் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் தொடங்கப்பட்டுள்ளன.
- இவை ஆழ்கடல் ஆய்வுத் திட்டத்தின் கீழ் உள்ள தேசிய இலக்குகள் மற்றும்

உள்ளடக்கிய நீலப் பொருளாதாரத்திற்கான தொலைநோக்குத் திட்டத்துடன் ஒன்று படுகின்றன.

- இந்த மீன் வளர்ப்புக் கூண்டுகள் ஆனது,சுமார் 7 மீ முதல் 10 மீ வரையிலான ஆழத்தில் நிறுவப் பட்டுள்ளதால், மீன் தீவனத்தைப் பாதுகாப்பாக அந்தந்த இடங்களுக்குக் கொண்டு செல்வதற்காக NIOT மையமானது நீர் வெளியேற்றி என்ற அடிப்படையில் செயல்படும் வகையில் உருவாக்கியுள்ளது.
- இந்த வடிவமைப்பு ஆனது, மிதவை சூரிய மின்னாற்றல் உற்பத்தி அமைப்பின் மூலம் இயக்கப்படுவதால், இது உணவளிக்கும் ஒரு செயல்முறையை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் ஆற்றல் நுகர்வையும் கணிசமாகக் குறைக்கிறது.
- சென்னையில் அமைந்துள்ள தேசியப் பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனம் (NIOT) ஆனது, புவி அறிவியல் துறை அமைச்சகத்தின் கீழ் ஒரு தன்னாட்சி சங்கமாக 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நிறுவப்பட்டது.

## போக்குவரத்து ரேடார் கருவி சரிபார்ப்புக்கான புதிய விதிகள்




- நுகர்வோர் விவகார அமைச்சகம் ஆனது, போக்குவரத்து ரேடார் கருவிகளின் கட்டாய சரிபார்ப்பு மற்றும் முத்திரையிடல் செயல்முறைகளை மேற்கொள்வதற்கான புதிய விதிமுறைகளை அறிவித்துள்ளது.
- நாடு முழுவதும் சாலைப் பாதுகாப்பு மற்றும் அமலாக்கத்தின் மீதான துல்லியத்தினை மேம்படுத்துவதற்காக ஜூலை 01 ஆம் தேதி முதல் இது அமல்படுத்தப்படும்.
- இந்தப் புதிய விதிகளானது 2011 ஆம் ஆண்டு சட்டப்பூர்வ அளவியல் (பொது) விதிகளின் கீழ் வருகின்றன.
- இது சாலைகளில் வாகன வேகத்தினை அளவிடுவதற்காகப் பரவலாகப் பயன்படுத்தப் படும் "நுண்ணலை டாப்ளர் ரேடார் கருவிகளுக்கும்" பொருந்தும்.


# சர்வதேசச் செய்திகள்

## சீனாவின் வெய்ஃபாங் நடைபெற்ற பட்டம் விடும் திருவிழா

- 42வது வெய்ஃபாங் சர்வதேசப் பட்டம் விடும் திருவிழாவில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு குழுவும் பங்கேற்றது.
- தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் ஆதரவுடன், குளோபல் மீடியா பாக்ஸ் முகமை என்பதைச் சேர்ந்த டீம் ஸ்கைட்டர்ஸ் எனும் தமிழக மாநில அணியானது, மிகவும் ஒரு பிரம்மாண்டமான ஊதப்பட்ட ஜல்லிக்கட்டு காளை உருவம் பதித்த ஒரு பட்டத்தைக்

காட்சிப்படுத்தியது.

- இது மாநிலத்தின் முக்கிய விளையாட்டின் சக்தி, பெருமை மற்றும் பாரம்பரியத்தை அடையாளப்படுத்தியது.
- தமிழ் எழுத்துக்களில் 'தமிழ் வாழ்க' என்ற சொற்கள் பொறிக்கப்பட்ட ஒரு மாபெரும் பட்டம் பறக்க விடப்பட்டது.
- இந்த நிகழ்வு ஆனது உலகின் மதிப்புமிக்க பட்டம் விடும் திருவிழாவாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- இது சீனாவின் ஷான்டாங் மாகாணத்தில் உள்ள வெய்ஃபாங் நகரில் நடைபெற்று வருகிறது.
- இது 'உலகின் காற்றாடி / பட்ட தலைநகரம்' என்று புகழப்படுகிறது.
- தற்போது நடைபெற்று வரும் 42வது பட்டத் திருவிழாவானது வெய்ஃபாங் சர்வதேசப் பட்டத் திருவிழா ஒரு வசந்த கால பாரம்பரியமாகும்.
- இந்தப் பங்கேற்பைத் தொடர்ந்து, மே மாதம் மாமல்லபுரத்தில் நடைபெற உள்ள 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு சர்வதேசப் பட்டத் திருவிழாவில் அதே உருவங்கள் கொண்ட பட்டம் இடம் பெறும்.





## உலகளாவிய கப்பல் போக்குவரத்து வரி


- இலண்டனில் நடைபெற்ற கடல் சார் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுவின் 83வது அமர்வின் போது "2050 ஆண்டில் நிகரச் சுழிய உமிழ்வு நிலையினை அடைவதற்கான சர்வதேச கடல் சார் அமைப்பின் கட்டமைப்பிற்கு" ஒப்புதல் அளித்துள்ளது.
- இது ஒட்டு மொத்தக் கப்பல் போக்குவரத்துத் துறையிலும் உள்ள பசுமை இல்ல வாயு உமிழ்வு மதிப்பு நிர்ணயத்துடன் சேர்த்து, கட்டாய உமிழ்வு வரம்புகளை மிகவும் நன்கு ஒருங்கிணைக்கிறது.
- இந்தப் புதிய கார்பன் வரியானது 2030 ஆம் ஆண்டில், சுமார் 30-40 பில்லியன் டாலர் வருவாயை ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதோடு இது ஆண்டிற்கு சுமார் 10 பில்லியன் டாலர் ஆகும்.
- இந்தக் கட்டமைப்பு ஆனது, 2040 ஆம் ஆண்டிற்குள் 60% உமிழ்வு குறைப்பை அடைய

உதவும் ஆனால் 2050 ஆம் ஆண்டிற்குள் வாக்குறுதியளிக்கப் பட்டப் படி நிகரச் சுழிய உமிழ்வு நிலையை எட்டாது.

- இந்தக் கொள்கையானது இந்தியா, பிரேசில் மற்றும் சீனா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், தென்னாப்பிரிக்கா மற்றும் சிங்கப்பூர் உள்ளிட்ட 63 நாடுகளின் ஆதரவைப் பெற்றுள்ளது.
- சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், ரஷ்யா மற்றும் வெனிசுலா போன்ற சில பெட்ரோலியம் உற்பத்தி செய்யும் நாடுகள் இந்த ஒப்பந்தத்தை எதிர்த்தன.




## பருவநிலை மாற்ற மன்றம்





- உலகளாவியப் பருவநிலை நடவடிக்கையை விரைவுபடுத்துவதற்காக வேண்டி, ஒரு புதிய சர்வதேச அமைப்பை உருவாக்கப் பிரேசில் அரசு முன்மொழிந்துள்ளது.
- இந்தத் திட்டமானது 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வடக்குப் பிரேசிலின் பெலம் நகரில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை மீதான மாநாட்டுக்கு (பங்குதாரர்கள் மாநாடு - COP30) முன்னதாக பகிரப்பட்டுள்ளது.
- பருவநிலை மாற்றம் மீதான ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பு மீதான உடன்படிக்கையின் (UNFCCC) கீழ் "பருவநிலை மாற்ற மன்றம்" என்ற ஓர் அமைப்பினை நிறுவ இந்தத் திட்டம் பரிந்துரைக்கிறது.

- இந்த மன்றமானது COP கூட்டங்களில் எடுக்கப்படும் பல முடிவுகளை மிக விரைவாகக் கண்காணிப்பதையும், சர்வதேச முன்னெடுப்புகளை சிறப்பாக ஒருங்கிணைக்கச் செய்வதையும், பருவநிலை நடவடிக்கையை மேலும் திறம்பட மேற்கொள்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## எதிர்காலத் தொழில்நுட்ப வகையிலான வட்ட வடிவ மோதுவிக் கருவி

- CERN எனப்படும் ஐரோப்பிய அணு ஆராய்ச்சி அமைப்பானது, உலகின் மிகப் பெரிய எதிர்கால நுட்ப வகையிலான வட்ட வடிவ மோதுவிக் கருவியினை (FCC) உருவாக்கச் செய்வதற்கான முயற்சியில் உள்ள அனைத்துத் தொழில்நுட்ப தடைகளையும் நீக்கி உள்ளது.
- சுவிட்சர்லாந்து-பிரான்சு ஆகியவற்றுக்கு இடையிலான எல்லைப் பகுதிக்கு அடியில் அமைக்கப் பட்டுள்ள 91 கிலோ மீட்டர் நீளமுள்ள வட்ட வடிவச் சுரங்கப்பாதையாக FCC அமைக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
- முன்மொழியப்பட்ட இந்த FCC ஆனது, எதிர்பாராத ஆற்றல் அளவில் இத்துகள்களை முடுக்குவித்து மோதும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- முன்மொழியப்பட்ட இந்தத் திட்டத்தின் நோக்கமானது, அடிப்படை விசைகள் மற்றும் துகள்களை ஆய்வு செய்வதற்காக என்று உயர் ஆற்றல் நிலைகளில் புரோட்டான்களை மோதச் செய்வதாகும்.





# பொருளாதாரச் செய்திகள்

## IIP குறியீடு - 28 நாட்கள் அளவிலான இடைவெளி


- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகமானது (MoSPI), தொழில்துறை உற்பத்திக் குறியீட்டை (IIP) 42 நாட்களுக்குப் பதிலாக இனி 28 நாட்களுக்குள் வெளியிட உள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அடிப்படை ஆண்டைக் கருத்தில் கொண்டு ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் தொழில்துறை உற்பத்தியின் நடவடிக்கைகளின் போக்குகளை இது அளவிடுகிறது.
- இது முந்தைய ஆண்டை விட ஒரு குறிப்பிட்ட ஆண்டில் தொழில்துறைக் களங்களில் நேரடி உற்பத்தியின் ஒப்பீட்டு மாற்றத்தைக் குறிக்கிறது.
- சமீபத்தியக் குறியீட்டின்படி, 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 5.2% மற்றும் பிப்ரவரி

மாதத்தில் 5.6% ஆக இருந்த IIP வளர்ச்சியிலிருந்து திடீர் சரிவைக் கண்டுள்ளது.

- ஜனவரி மாதத்தில் 5.8% ஆக இருந்த உற்பத்தி வளர்ச்சியானது பிப்ரவரி மாதத்தில் 2.9% ஆக பாதியாகக் குறைந்தது.
- ஒட்டுமொத்தத் தொழில்துறை செயல்பாட்டு வளர்ச்சியானது, 2024-25 ஆம் ஆண்டில் (பிப்ரவரி மாதம் வரையில்) 4.1% ஆக இருந்தது என்பதோடு இது 2023-24 ஆம் ஆண்டின் அதே காலக் கட்டத்தில் 6 சதவீதத்தினை விடக் குறைவாக இருந்தது.
- மூன்று முக்கியத் துறைகளில், மின்சாரத் துறையின் வளர்ச்சியில் மட்டுமே அதிகரிப்பு பதிவானது. ஜனவரி மாதத்தில் 2.4% ஆக இருந்த இது பிப்ரவரி மாதத்தில் 3.6% ஆக உயர்ந்தது.




## கைக்கருவிகள் மற்றும் மின்சாரக் கருவிகள் உற்பத்தித் துறைகள் குறித்த ஒரு அறிக்கை






- நிதி ஆயோக் அமைப்பானது கைக் கருவிகள் மற்றும் மின்சாரத்தில் இயங்கும் பல கருவிகள் மீதான துறைகள் குறித்த '25 பில்லியன் டாலருக்கும் அதிக மதிப்பிலான ஒரு ஏற்றுமதித் திறனை வெளிக்கொணர்தல் - இந்தியாவின் கைக் கருவிகள் மற்றும் மின்சாரக் கருவிகள் உற்பத்தித் துறை' என்ற தலைப்பிலான அறிக்கையை தற்போது வெளியிட்டுள்ளது.

- இந்தியாவானது கைக் கருவிகளில் 1.8% சந்தைப் பங்கையும், மின்சாரக் கருவிகளில் 0.7% சந்தைப் பங்கையும் கொண்டு உலகச் சந்தையில் சிறியப் பங்கையே கொண்டு உள்ளது.
- இருப்பினும், அடுத்த பத்தாண்டுகளில், இந்தியா மின்சாரக் கருவிகளின் ஏற்றுமதியில் 10% சந்தைப் பங்கையும், கைக் கருவிகளில் 25% சந்தைப் பங்கையும் எட்ட முடியும்.
- 2022 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட உலகளாவிய கருவி உற்பத்தி சந்தையானது, 2035 ஆம் ஆண்டிற்குள் இரட்டிப்படைந்து விரிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- கைக் கருவிகளானது கைகளால் மேற்கொள்ளப்படும் ஒரு செயல்பாட்டினைச் சார்ந்து இருக்கும் மோட்டார் பொருத்தப்படாத கருவிகளைக் குறிக்கின்றன.
- மின்சாரக் கருவிகள் மிக வேகமாகவும் வலுவாகவும் செயல்படுவதற்காக மின்சாரம் அல்லது மின் கலன்கள் போன்ற வெளிப்புற மூலங்களைப் பயன்படுத்துகின்றன.

## இந்தியப் பட்டு உற்பத்தி 2023-24

- இந்தியாவானது, உலகளாவியப் பட்டு உற்பத்தியிலும் அதன் நுகர்விலும் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- 2017-18 ஆம் ஆண்டில் 31,906 மெட்ரிக் டன்னாக இருந்த இந்தியாவின் கச்சாப் பட்டு உற்பத்தியானது, 2023-24 ஆம் ஆண்டில் 38,913 மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது.
- 2017-18 ஆம் ஆண்டில் 223,926 ஹெக்டேராக இருந்த மல்பெரி தோட்டப் பயிரிடல் ஆனது 2023-24 ஆம் ஆண்டில் 263,352 ஹெக்டேராக அதிகரித்தது.
- 2017-18 ஆம் ஆண்டில் சுமார் 1,649.48 கோடி ரூபாயாக இருந்த பட்டு மற்றும் பட்டுப் பொருட்களின் ஏற்றுமதியானது, 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 2,027.56 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## BM-04 குறுகிய தூர வரம்புடைய உந்துவிசை எறிகணை

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, BM-04 எனப்படும் நாட்டின் சமீபத்திய குறுகிய தூர தாக்குதல் வரம்புடைய உந்துவிசை எறிகணையின் மாதிரிப்

படம் மற்றும் விவரங்களை வெளியிட்டுள்ளது.

- BM-04 அதி மீயொலி வேகத்தில் (மாக் 5 மற்றும் அதற்கு மேல்) பறக்கக் கூடியது.
- இது 400 முதல் 1500 கிலோமீட்டர் வரையிலான ஒரு செயல்பாட்டு வரம்பைக் கொண்டு உள்ளது.
- உலோகக் கொள்கல ஏவு அமைப்பு மூலம் ஏவப்படும் இந்த இரண்டு நிலை கொண்ட எறிகணையானது எதிரி இலக்கை நோக்கி உந்திச் செல்வதற்குத் திட எரிபொருளைப் பயன்படுத்தும்.
- ரஷ்யா, அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய மூன்று நாடுகள் மட்டுமே தங்கள் ஆயுத இருப்பில் அதி மீயொலி எறிகணைகளைக் கொண்டுள்ளன.




## Three Gorges Antarctic Eye தொலைநோக்கி



- சீனாவானது சமீபத்தில் Three Gorges Antarctic Eye எனப்படுகின்ற தொலைநோக்கியை அண்டார்டிகாவில் திறந்து வைத்துள்ளது.
- சுமார் 3.2-மீட்டர் ரேடியோ / மில்லிமீட்டர் கொண்ட அலை தொலைநோக்கியானது, நட்சத்திர உருவாக்கம் மற்றும் அவற்றைத் தாங்கி நிற்கும் பரந்த வாயுத் திரளின் பிணைப்புகள் ஆகியவை குறித்த இரகசியங்களை வெளிக் கொணர்வதற்காக என்று

வடிவமைக்கப் பட்டு உள்ளது.

❖ முதன்மையான அறிவியல் பூர்வ நோக்கத்தில், பால் வெளி அண்டத்தின் நடுநிலை ஹைட்ரஜன் மற்றும் அம்மோனியா நிறமாலைகளை ஆய்வு செய்வதின் மீது கவனம் செலுத்துவதும் அடங்கும்.


## கருப்பு எலி மற்றும் ஹன்டா வைரஸ்

❖ அயல்நாட்டு இனங்களான கருப்பு எலிகள் ஆனது மடகாஸ்கர் நாட்டின் கிராமப்புறப் பகுதிகளில் பரவும் ஒரு கொடிய வைரஸின் ஓம்புயிரியாக உள்ளது.

❖ மனிதர்களில் கடுமையான ஒரு நோயை ஏற்படுத்தக் கூடிய ஹன்டா வைரஸ் ஆனது, பொதுவாகப் பாதிக்கப்பட்ட கொறித் துண்ணிகளின் சிறுநீர் அல்லது கழிவுகளுடன் மனிதர்கள் நேரடியாக தொடர்பு கொள்வதன் மூலம் பரவுகிறது.

❖ முதலில் ஆசியாவில் இருந்து இந்தப் பகுதிக்குள் ஊடுருவிய இக்கருப்பு எலியானது, 10 மற்றும் 14 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் மடகாஸ்கர் பகுதிகளில் பரவியது.

❖ பொதுவாக வேளாண் நிலங்களில் காணப்படுகின்ற இந்த எலிகள் வீடுகளில் காணப் படுவதில்லை.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## கிளிடினியம் லலிடே – வண்டு



❖ ரைசோடினே துணைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு புதிய வகை வண்டு இனங்களை

அறிவியலாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

- இந்தப் புதிய இனமானது, அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள டாலே பள்ளத்தாக்கு வனவிலங்கு சரணாலயத்தில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- வண்டுகள் பற்றிய முதன்மை ஆய்வாளர் (கோலியோப்டெராலஜிஸ்ட்) மற்றும் இந்திய விலங்கியல் ஆய்வு மையத்தின் முன்னாள் அறிவியலாளர் மறைந்த டாக்டர் லலிதா ரே சௌத்ரிக்குக் கௌரவமளிக்கும் வகையில் இதற்கு 'கிளினிடியம் லலிடே' என்று பெயரிடப்பட்டுள்ளது.

## உயிருள்ள பிரம்மாண்டமான கணவாய் மீன்





- அதன் இயற்கைச் சூழலில் காணப்படும் பிரம்மாண்டமான ஓர் இளம் கணவாய் மீன் ஆனது முதன்முதலில் ஆழ்கடலில் படம்பிடிக்கப்பட்டுள்ளது.
- இந்தப் பிரம்மாண்டமான கணவாய் மீன் ஆனது "கண்ணாடி" கணவாய் மீன் குடும்பத்தின் (கிராஞ்சிடே) ஒரு பகுதியாகும்.
- அண்டார்டிக் பெருங்கடலில், மூன்று அறியப்பட்ட கண்ணாடி கணவாய் இனங்கள் காணப் படுகின்றன ஆனால் புகைப்படங்களில் அவற்றை வேறுபடுத்தி அறிவது மிக கடினமாகும்.
- வணிக ரீதியாக வேட்டையாடப்பட்ட எண்ணெய்த் திமிங்கலத்தின் வயிற்றில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் இந்தப் பிரம்மாண்டமான கணவாய் மீன் குறித்து முதன்முதலில் 1925 ஆம் ஆண்டில் விவரிக்கப்பட்டது.
- இந்தப் பிரம்மாண்டமான கணவாய் மீன் ஆனது ஏழு மீட்டர் வரை வளரக் கூடியது மற்றும் 500 கிலோகிராம் வரையில் எடையுள்ளதாக இருக்கும் என்பதோடு இது இந்தப் புவியின் மிகப் பெரிய முதுகெலும்பில்லா உயிரினமாகக் கூறப்படுகிறது.

## வளங்காப்பகங்களில் அல்லாத புலிகளின் கண்காணிப்பு

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றங்கள் துறை அமைச்சகம் ஆனது "வளங் காப்பகங்களுக்கு வெளியே காணப்படும் புலிகளைக் கண்காணிப்பதற்கான" பகுதிகளின் எல்லைகளை முடிவு செய்ய உள்ளதாக கூறப்படுகிறது.

- இது மனித-விலங்கு மோதலைக் குறைப்பது மற்றும் வேட்டையாடலைத் தடுக்க என்று புலிகள் வளங்காப்பகங்களுக்கு வெளியே காணப்படும் புலிகளின் கண்காணிப்பை மேம்படுத்துவது ஆகிய இரண்டு முக்கிய நடவடிக்கைகளில் கவனம் செலுத்த உள்ளது.
- நாட்டின் மதிப்பிடப்பட்ட மொத்தம் 3,682 புலிகளில், சுமார் 30 சதவீதப் புலிகள் ஆனது அறிவிக்கப்பட்ட காப்பகங்களுக்கு வெளியே காணப்படுகின்றன.
- தேசியப் புலிகள் வளங்காப்பு ஆணையமானது (NTCA) இந்த திட்டத்தைச் செயல்படுத்த உள்ளது.
- NTCA ஆனது இதற்காக 10 மாநிலங்களில் 80 வனப் பிரிவுகளை அடையாளம் கண்டு உள்ளது.
- 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையில் பதிவான புலிகள்-மனிதர்கள் மோதலில் 378 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்பதோடு இந்த மோதல்களில் 2022 ஆம் ஆண்டில் மட்டும் 110 பேர் கொல்லப் பட்டுள்ளனர்.





# இதரச் செய்திகள்

## பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது பருவநிலை மாற்றத்தின் தாக்கம்

- ஒன்றிய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகம் (WCD) ஆனது, சமீபத்தில் "பருவநிலை மாற்றம் ஆனது வேளாண் சூழலியல் மண்டலங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளில் எத்தகையப் பாதிப்பினை ஏற்படுத்துகிறது" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவில் பல்வேறு பருவநிலை மற்றும் நிலப் பரப்புகளுடன் கூடிய 20 வேளாண் சூழலியல் மண்டலங்கள் உள்ளன.
- ஜார்க்கண்ட், குஜராத், மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகியவற்றில் தலா ஐந்து வேளாண் சூழலியல் மண்டலங்கள் காணப்படுகின்றன.
- வடகிழக்கு மலைகள் சார்ந்த (17வது) சூழலியல் மண்டலம் ஆனது மொத்தம் ஒன்பது மாநிலங்களில் பரவியுள்ளது.

- மேற்கு கரையோரச் சமவெளி (19வது) சார்ந்த சூழலியல் மண்டலமானது மொத்தம் எட்டு மாநிலங்களில் பரவியுள்ளது.
- 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அவர்களின் சிறிய உடல், பலவீனமான நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் பராமரிப்பாளர்களைச் சார்ந்திருப்பதன் நிலை ஆகியவை காரணமாக அதிக ஆபத்தை எதிர்கொள்கின்றனர்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★